1968 பிப்ரவரி 29] [Dr. H. V. Hande]

intended for the prevention of further infection. My point is what exactly is the original source of infection. If the Hon. Minister can ask his Department to furnish that information, I shall be thankful to him.

THE HON. THIRU. S. J. SADIQ PASHA : The Hon. Member himself is a medical practitioner and if he could give useful information, certainly it will be looked into.

5. அறிவிப்பு

மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட சட்டப் பேரவை மசோதாக்கள் 20—2—1968-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் ஆய்வு செய்து, பரிந்துரை எதுமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளனவென்று சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வந்துள்ளதென்று அறிவித்துக் கொள்கிறேன்—

(1) 1968-ம் ஆண்டு விவசாய வருமானவரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/67).

(2) 1968-ம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/68).

(3) 1968-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 1/68).

6. 1968–69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அடுத்து, வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். இந்த விவாதத்தை திரு. நா. காசிராமன் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள்.

*** திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, 1968–69-வது ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்பு நேற்றைய தினம் சமர்ப்பித்தார்கள். அந்த நிதி நிலை அறிக்கையிலே மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது புதிய வரிகள் இல்லை என்ற எண்ணமும், அது சர்பிளஸ் பட்ஜெட்டாக இருக்கிறது என்ற ஒரு எண்ணமும் உண்டாகும். ஆனால், போடப்படவேண்டிய வரிகள், போடக்கூடிய வரிகளைப் போன வருஷத்திற்கும், இந்த வருஷத்திற்குமாகவே சேர்த்தாற்போலவே ஒரே மொத்தமாக அதிகப்படியான வகையிலே போன வருஷமே போடப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக அதிகப்படியான வரி வருவாய் நம் மாநிலத்திற்குக் கிடைக்கிறது என்ற காரணத்தினால்தான் மேற்கொண்டு வரி போட முடியாத ஒரு நிலைமை, எதில் போடுவது என்ற ஒரு தயக்கம் காரணமாக வரி போடப்படாமல் இருக்கிறதே தவிர, வரியே போட வேண்டாம் என்ற நிலைமையில் விடப்படவில்லை. இப்பொழுது ரூ. 43·72 கோடி வரியின் மூலமாகவும், மற்ற இனங்களின் மூலமாகவும் நமக்கு வருவாய் கிடைப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த குறிப்பிலிருந்தும், மற்றைய குறிப்புகளிலிருந்தும் தெரியக்கிடக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்ற வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட வரி உயர்வினால், 9 மாத காலத்திற்கு உண்டான ஒரு பட்ஜெட்டை அளிக்கும்பொழுது, 9 மாத காலத்திற்கு ரூ. 5½ கோடி வருமானம் கொடுக்கக்கூடிய அளவிலே வரியை உயர்த்தியிருப்பதாக அவர்களுடைய நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். கணக்குப்போட்டு பார்த்தோமானால் 1967–68-வது வருஷத்திற்கு